முன் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல் இல்லை.

**திரு. கே. ராஜாராம்:** இதற்கு முன் இருந்த காங்கிரஸ் நிர்வாகத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு, முடி திருத்துவோர், சலவையாளருக்குத் தொழிற் கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவர்கள் கொடுத்தது ஒரு அளவோடு கொடுத்தார்கள். இப்பொழுது இலவசமாக நாங்கள் கொடுக்கிறோம்.

**திரு. கே. ராஜாராம்:** காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இலவசமாகக் கொடுக்கப்பட்டது.

**திரு. எம். எம். பக்கர்:** முஸ்லிம்களில் லப்பைகள் பிற்பட்டவர்கள். அவர்களிலும் சலவைத் தொழிலாளிகளும் முடி திருத்தும் தொழிலாளிகளும் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பெறுவது இல்லையா என்று அறிய விரும்புகிறேன். பெறாவிட்டால் வகை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இது வரை விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வரவில்லை. வந்தால் கவனிப்போம்.

### *Learner Drivers of the Transport Department*

* 208. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether a number of learner drivers of the Transport Department, were arrested in Madras about 13th August 1971; and

(*b*) if so, the reasons therefor ?

### போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பயிற்சி வலவர்கள்

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாள் அளவில், சென்னையில் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பயிற்சி வலவர்கள் (Learner Drivers) பலர் கைது செய்யப்பட்டனரா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

## Traffic Regulation Work by the Students

* 209. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the expansion of the scheme for the use of students for traffic regulation work in Madras City ?

## போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்கள்

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) :** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்த விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சென்னை மாநகரில் வண்டிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பணிக்கு மாணவர்களை முறையாகப் பயன்படுத்தும் திட்டம் எதும் இல்லை.

## Subramaniar Temple at Tiruchendur

* 210. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to answer the following question in connection with the answer for the L.C.Q. No. 75 on 31st January 1972—the present stage of the construction of break waters for protecting the Subramaniar Temple at Tiruchendur from sea erosion ?

## திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோவில்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 31—1—1972-ஆம் நாள் சட்ட மன்ற மேலவையில் வினு எண். 75-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை எந்த நிலையில் இருக்கிறது ?